## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 62. ஸ்ரீமான் மண்டலி மஹாராஜ்

---

**இவர் வாழ்க்கை நமக்கு உணர்த்தும் கருத்துக்கள்:**

* நம்மைப் போலவே பக்தி செய்ய வேண்டும் என்று மற்றவரிடம் எதிர்பார்க்க வேண்டாம்.

* இறைவனிடம் ஒவ்வொருவருக்கும் இருக்கும் மரியாதை - உறவு - அனுகுமுறை மாறும்.

* அன்பர்களின் பக்தி உண்மையாக இருக்க வேண்டும்.

* பாவ பக்திக்கும் - உள்ளார்ந்த பக்திக்கும் வேற்றுமைகளைப் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும்.

* பக்தி நிலைகளின் தன்மைகளை குரு விளக்க வேண்டும்.

* அனைவரின் பக்திக்கும் நாம் மரியாதையை வெளிப்புறமாகவும் காட்டுவது நல்லது.

**வாழ்க்கை வரலாறு:**
க்வாலியர் நகரத்தை ஆண்ட ஹேம்சந்த் அரசனின் ஒரே மகன் தான் மண்டலி ராஜ்.இவர் கர்ப்பத்தில் இருக்கும் போது பெற்றோர் தம் குலகுருவின் வழிகாட்டலின் கீழ் ஸ்ரத்தையான ஆன்மீக சாதனைகள் செய்தனர்.அதன் பலனாய் இவன் ”கருவிலேயே திருவுடைய” செல்வன் ஆனான்.ஸ்ரீராம பக்தியின் மேன்மையை மிகவும் சிறுவனாக இருக்கும் போதே அறிவான்.

**விளையாடும் போதும் ராமன்**
ஐந்து வயதில் மண்டலி ராஜ் விளையாடும் போதும் பொம்மைகளை விட்டுவிட்டு ஸ்ரீராமனின் மரச்சிலையைத் தான் விரும்பி எடுப்பானாம்.அம்மா எதைக் கொடுத்தாலும் உடனே அதைத் தன் ராமனுக்கு அர்ப்பணம் செய்வானாம்.தான் பரதன் என்றும், தன் தேசம் ஸ்ரீராமனுடையது என்றும் அவ்வயதிலேயே சொல்வானாம்.

**மண்டலிக்குள் எழுந்த ஞானம்**

சதா விளையாட்டிலும் படிப்பிலும் போர்க் கலைகளிலும் ஒரு இளைவரசாய்ப் பயிற்சிகள் பெறும் போதும் அவனுள் மிக்க ராம தத்வ விழிப்புணர்வு ஏற்பட்டது.ஒரு மரக்கட்டைச்சிலைக்குள் தான் காணும் ராமன் தானே சர்வ ப்ரபஞ்ச தத்துவமாயும் வ்யாபித்து இருக்கிறான் என்ற சூட்சுமத்தை மண்டலி மஹராஜ் எப்படியோ புரிந்து கொண்டான்.

அதனால் அனைவரிடத்திலும் மிக்க அன்பும், உதவியும் அவனுக்கு எளிதில் கைகூடியது.அவனது ஆழ்ந்த ஞானம் கண்டு குலகுருவே ஒரு முறை அவனை நமஸ்கரித்தாராம்.அதே வேளை அவனுக்கு ஸ்ரீராம தாரக மந்த்ர உபதேசம் செய்து வைத்தார்.

**மண்டலி கண்ட மாற்றம்**

ராம தத்துவத்தை உணர்ந்த அவன் அந்தர்யாமியாய் எங்கும் எதிலும் பூரணமாய் இருக்கும் ப்ரஹ்ம சத்யமான தெய்வீகத்தை உணரத்தொடங்கியதும் வெளிப்புற வழிபாடுகளை அமைதியாய் கவனித்தான்.அதில் வெளிப்படையாகப் பங்கேற்பதைக் குறைத்தான்.இது தவறு! இதை அவன் குரு திருத்தவில்லை.இதனால் இவன் மாறிவிட்டதாக அவன் பெற்றோரே மனம் கலங்கினராம்.

**பாவ பக்தியில் லயிக்கும் மனைவி**

உரிய வயதில் மண்டலிக்குக் கல்யாணம் செய்தனர்.ஸ்ரீமதி ரமா தேவி அவர் பெயர்.அவரோ மிகச் சிறிய வயது முதல் வெளிப்படையான பாவ பக்தியில் தன்னை தெய்வத்திடம் இழந்தவர்.அவருக்கும் மண்டலியின் ஞான மார்க்க ஆன்மீகம் புரியவில்லை.தன் கணவனை ஒரு நாஸ்திகன் என்று எண்ணி வருந்தினார்.

அரண்மனையில் ரமா தேவி செய்யும் பூஜைகளிலோ முக்கிய பண்டிகைகளிலோ மண்டலி வெறுமனே அமர்ந்து உள்ளூர கவனம் செய்வானாம்.இதனால் அவற்றில் இவனுக்கு ஈடுபாடு இல்லை என்றே ரமா முடிவு செய்து தன் ராமனிடம் முறையிடுகிறாள்.

நாளுக்கு நாள் இப்பரச்சனை வளர்கிறது.ரமாவின் ஐயப்பாட்டுக்கு துணை மண்டலியின் பெற்றோரும் ஆவர்.இதனால் தம்பதிகளுக்கு இடையில் மனக்கலக்கம் ஏற்பட்டது.எதையுமே வாய் திறந்து பேசும் குணம் மண்டலிக்கு வரவில்லை.ஸ்ரீராம நவமி மஹா உத்சவத்தை ஏற்பாடு செய்வதில் தீவிரமாக ரமா தேவி இருக்கிறார்.

**கனவில் பேசிய உண்மை**

மறுநாள் ஸ்ரீராம நவமி.அன்று இரவு அரண்மனை உறக்கத்தில் ஆழ்ந்தது.ரமா தேவி தன் மனக்கலக்கத்தை தெய்வத்திடம் கூறி த்யானத்தில் கிடந்தார்.அப்போது ஏதோ முனகல் வர, திரும்பினால் மண்டலி, "ஹே ராமா! ஹரே அயோத்யா நாதா!" என்று சில நிமிடங்கள் பேசினான்.

அதைக் கேட்டதும் ரமாவுக்கோ மகிழ்ச்சி தலைக்கு ஏற, உடனே தன் மாமனாரையும் மாமியையும் எழுப்பி நிகழ்ந்ததைக் கூறினாள்.அவர்களுக்குத் தன் மகன் மீண்டும் ராம பக்தியில் ஈடுபட வருகிறான் என எண்ணி மகிழ, ரமா பூஜா அறைக்குள் சென்று நமஸ்காரம்  செய்தாள்.விளக்குகள் ஏற்றினாள், விஷ்ணு சஹஸ்ரநாமம் சொன்னாள்.

சத்தம் கேட்டு எழுந்த மண்டலி, "என்ன இரவில் இவை எல்லாம்?" என்று கேட்க, பெற்றோரும் மனைவியும் நிகழ்ந்ததைக் கூற, **"ஐயோ! வாய் விட்டு அவன் நாமத்தைக் கூறும் அளவுக்கு அவன் என் மனதில் இருந்து வெளியேறி விட்டானா? ஹே ராமா கடந்த 28 ஆண்டுகளாய் என்னுள் இருந்து எங்கும் போகாத நீ இன்று இரவில் விலகினாயா? ஐயோ மீண்டும் அந்த அந்தர்யாமி ஸ்வரூபமாய் உன்னை அடைய நான் பாடுபடுவேனா?"** என்று அழுது கத்தி மாரடைப்பு வந்து அப்போதே உயிரை விட்டுவிட்டான்.

அப்போது தான் அனைவருக்கும் மண்டலியின் ஆத்மார்த்த பக்தியும் ஞானமும் புரிந்தது.தன் கணவனின் ஞானத்தை உணர முடியாமல் போனதற்காக மிகவும் வருந்தினாள் ரமா.தன் சீடனின் பக்குவத்தை வெளியில் விலக்காமல் போனதற்காக மிகவும் வருந்தினார் குரு.அவனை அனைத்துடனும் ஈடுபட வைக்க அவனுக்கு வழிகாட்டாமல் போனதன் வினையே இது என உணர்ந்து அழுதார்.

**ஸ்ரீராமனைப் பிரிந்த பரதனோ சீதையோ கூட உயிரை வைத்துக் கொண்டு இருந்தார்கள். தன்னுள் இருக்கும் ஸ்ரீராம தத்துவம் எங்கோ விலகியதோ என்று எண்ணிய மாத்ரத்திலேயே மண்டலி மஹராஜ் உயிரை விட்டார் என்றால்?!**

ஹரி ஓம்!